# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**(Under Section 173 BNSS)**
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்றவியல் நடைமுறை விதி பிரிவு 154-இன் கீழ்)~~

C 8129130

1. District : ஈ.ரோடு
மாவட்டம்
PS: ஊ.த.க. பிரிவு ஈரோடு
காவல்நிலையம்
Year: 2025
ஆண்டு
FIR No. 01/AC/2025
மு.த.அ. எண்
Date: 06.02.2025 08.00 மணி
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the
Sections பிரிவுகள்: 7(a),
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018
Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் 04.02.2025
Date to : நாள் வரை 05.02.2025
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.2.2025
Time : நேரம் 18.00 மணி
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. VOL-I
Time : நேரம் 06.02.2025 08.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக [illegible]

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ தென்மேற்கு
Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address
முகவரி பத்மாவதி பாலைசிப்பு மற்றும் புங்கம்பாடி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், புங்கம்பாடி கிராமம் பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A.மஞ்சு
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர் சுப்பிரமணியம்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 15.3.1986.
(d) Nationality :
நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில் விவசாயி
(g) Address எண் 12/20, பாரதி வீதி, வி.ஐ.பி நகர் பெருந்துறை
முகவரி பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet If necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திருமதி. ஜெயசுதா, கிராம நிர்வாக அலுவலர், புங்கம்பாடி கிராமம் பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம்
2) திரு. சபரி தனி நபர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது!

தனித்தாளில் கணினியல் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

06.2.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

A. Mayin
6.2.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.2.25
10.00 hrs

Name: பெயர் M. ரேகா,
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் .........
ஊ.மு.த. பிரிவு, ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 01/AC/2025 u/s 7(a), 12 r/w 7 (a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M.ரேகா ஆகிய நான் 05.02.2025 தேதி மாலை 18.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திருமதி. A.மஞ்சு, க.பெ. சுப்பிரமணியம், எண்.42/20, பாவடி வீதி, வி.ஐ.பி. நகர், பெருந்துறை, பெருந்துறை தாலுக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் A.மஞ்சு, க.பெ. சுப்பிரமணியம், எண்.42/20, பாவடி வீதி, வி.ஐ.பி. நகர், பெருந்துறை, பெருந்துறை தாலுக்கா, ஈரோடு மாவட்டம். பெறுதல் லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் அவர்கள், கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் என்னுடைய குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது அப்பா திரு.அண்ணாமலை அவர்கள் கடந்த 2022 வருடம் பெருந்துறை தாலுக்கா புங்கம்பாடி கிராமத்தில் ஸ்ரீவராஹி பறவை சிட்டி என்ற பெயரில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்ட இடத்தில் சர்வே எண். 364/2C7-ல் சைட் எண்.21-ல் 1200 சதுரடி கொண்ட காலிமனை இடத்தினை விலைக்கு வாங்கியிருந்தார். மேற்படி மனையினை எனது தந்தை அண்ணாமலை அவர்கள் 27.01.2025ம் தேதியன்று பெருந்துறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.417/2025 படி எனக்கு கிரையம் செய்துகொடுத்தார். 03.02.2025ம் தேதி மதியம் 9344434783 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் எண் 9095262920க்கு ஒரு போன்கால் வந்தது. தான் புங்கம்பாடி வி.ஏ.ஓ ஜெயசுதா பேசுவதாகவும், நீங்கள் பதிவு செய்த கிரய ஆவணத்தின்படி பட்டா பெயர் மாறுதலுக்கான விண்ணப்பமானது பெருந்துறை பத்திரப்பதிவு அலுவலகத்திலிருந்து தன்னுடைய லாகினுக்கு வந்திருப்பதாகவும், அது சம்மந்தமாக என்னை விசாரிக்க வேண்டி இருப்பதாகவும், அசல் ஆவணங்களுடன் நேரில் அலுவலகம் வரும்படியும் சொன்னார். அன்று எனக்கு வீட்டில் வேலை இருந்தப்படியால் தற்போது வரமுடியாது நாளைக்கு வருகிறேன் என்று சொன்னேன். அதன்பிறகு நேற்று 04.02.2025 காலை சுமார் 9.20 மணி மற்றும் 9.25 மணிக்கு நான் போன் செய்தபோது மணியக்காரர் திருமதி.ஜெயசுதா போன் எடுக்கவில்லை. அதன்பின் காலை சுமார் 9.30 மணிக்கு அவர் என்னை செல்போனில் கூப்பிட்டு உங்கள் இடத்தினை நான் பார்க்க வேண்டும். அதனால் நேரில் வந்து உங்கள் இடத்தினை காட்டுங்கள் என்று சொன்னார். அப்போது, நான் சுமார் 11 மணிக்குள் வந்துவிடுகிறேன் என்று சொன்னேன். அவரும் சரி என்று சொன்னார். அதன்பின் நான் என் வீட்டு வேலையை முடித்துவிட்டு சுமார் 11.30 மணிக்கு புங்கம்பாடியில் இருக்கும் வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்று வெளியில் அமர்ந்திருந்தேன். அந்த

அலுவலகத்திலிருந்த ஒரு நபர் என்னை பார்த்து அலுவலகத்தின் உள்ளே வரும்படி அழைத்து வி.ஏ.ஓ அவர்களை பார்க்குமாறு சொன்னார். நானும் சென்று வி.ஏ.ஓ. அவர்களிடம் என்னுடைய பத்திரத்தின் அசல் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றை கொடுத்தேன். அவரும் வாங்கி பார்த்துவிட்டு என்னிடமே ஆவணங்களை திருப்பி கொடுத்துவிட்டு சற்று நேரம் காத்திருக்கும்படி கூறினார். சுமார் அரை மணி நேரத்தில் அவருடைய வேலையை முடித்துவிட்டு என்னை அழைத்து நீங்கள் உங்கள் வாகனத்தில் முன்னால் சென்று உங்கள் இடத்தை காட்டுங்கள், நான் பின்னால் வருகிறேன் என்று கூறி அவரும், பின்னர் பெயர் விபரம் தெரிந்துகொண்ட சபரி என்பவரும் காரில் என்னை பின்தொடர்ந்து வந்தனர். ஸ்ரீவராஹி பறவை சிட்டியில் எனது தந்தையிடமிருந்து நான் வாங்கியுள்ள மனை எண்.21ஐ காண்பித்தேன். அவர்களும் மனையினை பார்வையிட்டுவிட்டு, அவர்கள் வந்த காரில் அமர்ந்து கொண்டு என்னை அருகில் அழைத்தனர். அப்போது காரினை ஓட்டிவந்த சபரி பட்டா மாறுதலுக்கு ரூபாய் 3500/- செலவாகும் என்று கூறினார். அப்போது வி.ஏ.ஓ.வும் ரூ.3500/-ஐ கொடுத்துவிட்டால் உங்களுடைய வேலை முடித்து பட்டா மாறுதல் உடனடியாக கிடைத்துவிடும் என்று சொன்னார். நான் தயங்கியப்படியே நின்று கொண்டிருந்தேன். அப்போது வி.ஏ.ஓ. பணம் கொடுக்கவில்லை என்றால் உங்களது வேலை ஆகாது என்று கூறிவிட்டு அவர்கள் இருவரும் அவர்கள் வந்த காரில் சென்றுவிட்டனர். நான் அதன்பின்பு என்னுடைய அண்ணனிடம் மேற்படி விபரத்தை போனில் சொன்னேன். அவர் அவ்வளவு தொகையல்லாம் கொடுக்க முடியாது கொஞ்சம் குறைத்துகொள்ளும்படி கேட்டுப்பார் என்று சொன்னார். அதனால் நான் என்னுடைய செல்போனிலிருந்து வி.ஏ.ஓ. அவர்களை அழைத்து என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு நீங்கள் கேட்டப்பணம் அதிகமாக இருக்கிறது கொஞ்சம் குறைத்துக்கொண்டு ரூபாய் 2,500/-க்கு என்னுடைய வேலையை முடித்து கொடுப்பீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் சரி, பன்னிக்கலாம், ஆனால் இந்த விசயத்தை எல்லாம் போனில் பேச கூடாது நாளைக்கு ஆபிஸ்க்கு நேரில் வாங்க பேசிக்கலாம் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்படி இன்று 05.02.2025 மதியம் சுமார் 2.00 மணிக்கு புங்கம்பாடியில் இருக்கும் வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அதனால் வி.ஏ.ஓ. அவர்களுக்கு போன் செய்து, நான் அலுவலகத்திற்கு வந்திருக்கும் விபரத்தை சொன்னபோது தாங்கள் வெளியில் இருப்பதாகவும், சிறிது நேரம் காத்திருங்கள் வந்துவிடுகிறோம் என்றும் வி.ஏ.ஓ சொன்னார். அதன்பின் சிறிது நேரத்திலேயே வி.ஏ.ஓ. என்னை போனில் அழைத்து அலுவலகத்திலயே இருங்கள் சென்றுவிட வேண்டாம் என்று சொன்னதன்பேரில் நான் அலுவலகத்தின் அருகிலேயே காத்திருந்தேன். சுமார் ஒரு மணி நேரமாக காத்திருந்தும் அவர்கள் வராததால் நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து சுமார் 3.00 மணிக்கு நான் எனது வண்டியை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் வந்தபோது, எதிரில் வி.ஏ.ஓ.

ஜெயசுதாவும், சபரியும் காரில் வந்தார்கள். சபரி என்னை அலுவலகத்திற்கு வருமாறு சொல்லி கை காட்டிவிட்டு வி.ஏ.ஓ. அலுவலகத்தை நோக்கி சென்றார்கள். நான் திரும்ப அலுவலகத்திற்கு சென்று வி.ஏ.ஓ. ஜெயசுதாவிடம் நிலம் சம்மந்தமான ஆவணங்களை கொடுத்தேன். அவரும் வாங்கி வைத்துக்கொண்டார். அப்போது நான் அமொண்ட் மட்டும் கொஞ்சம் குறைச்சுக்கோங்க என்று கேட்டேன். அதற்கு அவர் நார்மல் ஆக ஆகும் செலவை சொல்லிவிட்டோம். அதனால நீங்களே கேட்டுக்கிட்டதற்காக ரூ.2500/-க்கு பண்ணிக்கலாம். இதுக்குமேல நாங்க ஒன்னுமே பண்ண முடியாது, நான் எதுவும் செய்யறதுக்கு இல்லை என்று சொல்லிவிட்டார். நான் சரி நாளைக்கு பணத்துடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பியபோது அங்கிருந்த சபரி இப்போது பணம் இருந்தா கொடுத்துட்டு போய்டீங்கனா சீக்கிரம் வேலையை முடிச்சுருலாம் என்று சொன்னார். நான் என்னிடம் தற்போது எனது செலவுக்கு மட்டும் தான் இருக்குது. நாளைக்கு காலைல கொண்டுவந்துருட்டா என்று கேட்டேன். அவரும் சரி நாளைக்கு கொண்டுவந்துருங்க என்று சொன்னார். அப்போது வி.ஏ.ஓ.வும் நாளைக்கு வந்துவிடுங்கள் என்று சொன்னார். நான் அந்த அலுவலகத்திலிருந்து கிளம்பி வந்துவிட்டேன். அதன்பின் நான் யோசனை செய்து பார்த்ததில் எனது அப்பா அண்ணாமலை அவர்கள் பெயரிலிருந்து எனது பெயருக்கு பட்டா பெயர் மாறுதல் உத்தரவு வழங்க புங்கம்பாடி வி.ஏ.ஓ திருமதி.ஜெயசுதா அவர்களுக்கு பணம் ரூ.2500/- லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே புங்கம்பாடி வி.ஏ.ஓ திருமதி.ஜெயசுதா மற்றும் அவருடன் இருந்த சபரி ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (A.மஞ்சு) 05.02.2025.

Sir, Received the above said computer typed complaint on 05.02.2025 at 18.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2025 u/s 7(a), 12 r/w 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 today on 06.02.2025 at 08.00 hrs. Sd/- (xxxxxxxx) 06.02.2025 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tmt.A.Manju, W/o Subramaniam, D.No.42/20, Pavadi street, VIP Nagar, Perundurai, Perundurai Taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

06.2.2025

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.